[1986 ஏப்ரல் 25]

ரூ. 20,000-க்கு மேல்வருமானம் உள்ள ஊராட்சி மன்றங்களாக இருக்குமானால் அரசாங்கம் 25 சதவீதம் மானியம் கொடுக்கும் மீதியை அந்த ஊராட்சி மன்றம் ஏற்றுக்கொள்ளும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொரப்பூர் தொகுதியில் ஒன்பது, பத்து பஞ்சாயத்துக்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப் பட்டிருக்கின்றன. ஆனால் அதன் தொடர்பு நிலையம் ஏற்காட்டில் இருக்கிறது. எனவே அந்தப் பெட்டிகள் மூலம் படங்கள் பார்ப்பதற்கு சரியாகக் கிடைக்கவில்லையென்று புகார் சொல்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டால் தொலைக்காட்சியின் சக்தி குறைவாக இருப்பதால் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே ஏற்காடு நிலையத்தின் சக்தியை அதிகப்படுத்தினால், அதன் பவரை அதிகப்படுத்தினால் அரூர், ஊத்தங்கரை போன்றயிடங்களில் நன்கு பார்க்க வசதியாக இருக்கும். இப்போது பலயிடங்களில் சரியாகப் படங்கள் பார்க்க முடியவில்லை. எனவே அந்த நிலையத்தின் சக்தியை அதிகப்படுத்த, அதை விரிவுபடுத்த அரசாங்கம்த்தால் நடவடிக்கை எடுக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சி நிலையத்தின் சக்தியை அதிகப் படுத்த வேண்டும் என்றால் அதை மத்திய அரசுதான் செய்ய வேண்டும், நமக்கு அதிகாரம் இல்லை. அவர்கள் சொல்லி யிருக்கிற தொலை தூரத்திற்குத் தெரியும் என்ற நம்பிக்கை யோடுதான் கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். ஒரு வேளை தெரியவில்லை என்று சொன்னால் பூஸ்டர் வைத்துப் பார்க்கலாம். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அந்த முயற்சியும் சரியாக வரவில்லையென்றால் மத்திய அரசுக்கு இதைப்பற்றி எழுதலாம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, அவைக்குறிப்பி லிருந்து நீக்கப்படுகிறது.

திருச்சி பேருந்து நிலையம்.

556.—(*வினா எண். 5086)— திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி பஸ் நிலையம் பணி எப்போது முடியும்?

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1986 ஏப்ரல் 25

(ஆ) முடிவடைந்த நிலையத்தில் என்ன வசதிகள் இருக்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) திருச்சி பேருந்து நிலைய பணி நடப்பு 1985—86-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த ஆண்டில் முடிக்கப்படும்.

(ஆ) முழுவதும் கட்டி முடிக்கப்பட்ட பின், அப்பேருந்து நிலையம், 34 கடைகள், ஒரு உணவு விடுதி, 20 தங்கும் அறைகள் மற்றும் 17 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிறுத்தவும், பயணிகள் நிற்கவும் ஆகிய வசதிகள் கொண்டதாக இருக்கும்.

(முற்பகல் 9–30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருச்சிபேருந்து நிலையம் சென்னைக்கு வருகின்றவர்களுக்கு மத்தியிலே இருக்கின்ற காரணத்தால், அதிகமான நெருக்கடியுள்ள பேருந்து நிலையமாக இருக்கிறது. அங்கே கழிப்பறை வசதி ஒழுங்காக இல்லாத காரணத்தினால், பயணிகள் அதிகம் இன்னலுற வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தில் கழிப்பறைகள் பற்றி குறிப்பிடவில்லை. அதைப்பற்றிய விவரம் ஏதாவது இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்த வசதி செய்து தரப்படும்.

திரு. டி.ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்த வசதி செய்து தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படியென்றால், அதற்கு திருத்திய மதிப்பீடு பெற்றுதான் அந்த வேலை மேற்கொள்ளப்படுமா? அல்லது இந்தத் திட்டத்திலேயே அதுவும் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற மதிப்பீட்டில் சேர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால், திருத்திய மதிப்பீடு பெற வேண்டுமென்றால், மீண்டும் அது பெறப்பட்டு, அந்த வசதி நிச்சயமாக செய்து தரப்படும் என்ற உறுதியை அளிக்கின்றேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்கு தமிழக அரசின் சாதனைகள், மற்றும் தமிழகத்திலுள்ள நல்ல திட்டங்களை யெல்லாம் அரசு அறிவிக்கின்றது. மற்றும் பல செய்திகளை மக்கள் கண்டு களிக்க வேண்டுமென்று அரசு தொலைக்காட்சி வசதிகளைச் செய்திருக்கிறது. இந்த தொலைக்காட்சி பெட்டிகளை ....

(குறுக்கீடு)